# ‘மேன்மைக்கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்’



**சைவ நெறி**

**தரம் - 10**

**சுவாமி விபுலாநந்தர் (அலகு - 16)**

வழிகாட்டல் குறிப்புக்கள்

தயாரிப்பு - K. சரோஜினி
கே / தெஹி / சரஸ்வதி த. ம. வி
மியனவிட

பாடம் :- சைவநெறி

தரம் - 10

பாட ஆசிரியர் - K. சரோஜினி

அலகு - 16

## சுவாமி விபுலாநந்தர்

- ✓ சைவமும் தமிழும் தழைக்கப் பணியாற்றிய ஈழத்து சான்றோர்களுள் முக்கியமான ஒருவராவார்.
- ✓ சமயம், மொழி, இலக்கிய, கலை, கல்வி பல துறைகளில் சிறப்பு பெற்றவர்.

## பிறப்பு

- ➢ மட்டக்களப்பு மாநகருத்குத் தெற்காக சுமார் 35 கி.மீ தூரத்தில் கடலோரமாக அமைந்துள்ள காரைத்தீவு என்னும் ஊரில் பிறந்தார்.
- ➢ சாமித்தம்பி, கண்ணம்மை இவரின் பெற்றோர்களாவர்.
- ➢ 03.05.1892ம் ஆண்டு பிறந்தார்.
- ➢ இளமைப் பெயர் மயில்வாகனம்

## கல்வி

- தனது கிராமத்திலேயே ஆரம்பக் கல்வியைப் பெற்றமை.
- ஆங்கில வழிக் கல்வியை கல்முனை மெதடிங்த ஆங்கில கல்லூரியிலும் பெற்றுக் கொண்டார்.
- 1908 இல் கேம்பிறிச் சீனியர் தேர்வில் சித்தியடைந்தார்.
- 1915 இல் கொழும்பு தொழிநுட்பக் கல்லூரியில் இணைந்துக் கொண்டார்.
- விஞ்ஞானத்தில் பட்டயச் சான்றிதழ் பெற்றார்.
- வடமொழியில் தேர்ச்சி பெற்றார்.
- மதுரைச் தமிழ் சங்கப் பண்டிதர் பரீட்சைக்குத தோற்றி, சிறப்புச்சித்தி எய்தினார்.

- இதன் காரணமாக பண்டிதர் மயில்வாகனார் என அழைக்கப்பட்டார்.
- இலண்டன் பல்கலைக்கழக விஞ்ஞானமானிப் பரீட்சைக்குத் தோற்றி (B.Sc) பட்டதாரியானார்.

## வகித்த பதவிகள்

- தான் கற்ற கல்லூரிகளில் சிறிது காலம் ஆசிரியராகக் கடமை ஆற்றினார்.
- 1917 இல் யாழ்ப்பாணம் புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியரானார்.
- 1920 மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபர் பொறுப்பினை ஏற்றுக் கொண்டார்.
- ஆன்மீகப் பயிற்சிகளை முறையாகப் பெற்றுக் கொண்ட இவர் பிரபோதசைதன்யர் என்ற பிரம்மச்சரிய நாமத்தோடு பணியாற்றினார்.
- இராமகிருஷ்ண சங்கம் வெளியிட்டு வந்த இராமகிருஷ்ண விஜயம் என்னும் தமிழ் மொழி மூலச் சஞ்சிகைக்கும் , வேதாங்க கேசி என்னம் ஆங்கில மொழி மூலம் சஞ்சிகைகளுக்கும் ஆசிரியராக விளங்கினார்.
- ஆன்மிக அறிவினைப் பரப்பினார்.
- இராமகிருஷ்ண சங்கத்தின் பாடசாலைகளின் பொது முகாமையாளராக இருந்தார்.
- அவற்றுள் சிலவற்றின் அதிபராகவும் கடமையாற்றினார்.
- இராமகிருஷ்ண சங்கத்தினூடாக இலங்கையில் வெளிவந்த விவேகாநந்தன் இதழின் ஆசிரியராகவும் 1926 இல் கடமையாற்றினார்.
- அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தாபிக்கப்பட்டு தமிழ்துறை நிறுவப்பட்ட வேளையில் அத்துறைக்கான பேராசிரியராக கடமையாற்றினார்.

- 1942 இல் இலங்கை பல்கலைக்கழகம் கல்லூரி பல்கலைக்கழகமாக தரமுயர்த்தப்பட்ட போது 1948இல் நிறுவப்பட்ட தமிழ்துறைக்கான பதவி வகுத்தார்.

## துறவறம்

- ✓ சுவாமி விபுலாநந்தரின் நண்பராக விளங்கியவர் மு. திருவிளங்கம் என்பவராவார்.
- ✓ திருவிளங்கம் அவர்கள் எதிர்பாராத வகையில் காலமானார்.
- ✓ இவரின் இழப்பு, மயில்வாகனனாரின் உள்ளத்தில் தீவிரமான துறவு நாட்டத்தை ஏற்படுத்தியது.
- ✓ யோகர் சுவாமிகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்.
- ✓ உலகியலில் சலிப்புற்ற இவர் தமது பதவியைத் துறந்து 1922 இல் இராமகிருஷ்ண மடத்தில் இணைந்துக் கொண்டார்.
- ✓ 1924 இல் சித்திராபௌர்ணமி தினத்தில் துறவறத்தை மேவினார்.
- ✓ சுவாமி சிவாநந்தர் என்பவர் இராமகிருஷ்ண மடத்தின் தலைவராகவும் , இராமகிருஷ்ண பரமஹம்சரின் நேரடிச் சீடர்களுள் ஒருவராக விளங்கியவர்.
- ✓ சுவாமி சிவாநந்தருக்கு ஞானோபதேசம் வழங்கி விபுலாந்தர் என்னும் துறவறத் திருநாமத்தைச் சூட்டினார்.
- ✓ இதன் காரணமாக சுவாமி விபுலாநந்தர் ஆனார்.

## பணிகள்

- ❖ மட்டக்களப்பு, திருகோணமலை முதலான இடங்களில் பாடசாலைகளை நிறுவினார்.
- ❖ மட்டக்களப்பு கல்லடியில் நிறுவிய பாடசாலைக்கு தனது குருவின் பெயரான சிவாநந்தர் வித்தியாலயம் என்று பெயர் சூட்டினார்.
- ❖ பாடசாலைகளின் பொது முகாமையாளராகவும், அதிபராகவும் கடமையாற்றினார்.
- ❖ விவேகானந்தன் இதழின் ஆசிரியராக கடமையாற்றினார்.
- ❖ மதுரைத் தமிழ்சங்கம், கரந்தைத் தமிழ்ச்சங்கம், சைவ சித்தாந்த மகாசமாசம் , சென்னை மாகாணத் தமிழர் சங்கம் முதலான பிற நிறுவனங்களோடு தொடர்புபட்டு பல பணிகளை மேற்கொண்டார்.
- ❖ நாடகத்துறையை ஆராய்ச்சி செய்து, மதங்கசூளாமணி என்ற பெயரில் நூலாக வெளியிட்டார்.
- ❖ சொற்பொழிவாற்றியமை.
- ❖ இவர் பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டார்.
- ❖ பண்டைத் தமிழ் இசை மரபு பற்றிய ஆராய்ச்சியின் விளைவாக யாழ்நூல் என்ற பெயரில் வெளிவந்தது.
- ❖ சமூகத் தொண்டராகவும், சுதந்திர ஆர்வலாகத் திகழ்ந்தார். பல நூல்களை எழுதினார்.
- ❖ ஏராளமான கட்டுரைகளை தமிழிலும் , ஆங்கிலத்திலும் எழுதினார்.

## இறப்பு

- ✓ 1947 ம் ஆண்டு ஜீலை மாதம் 19ம் திகதி இவ்வுலகை நீத்தார்.

**சைவ பெரியோர்களை போற்றுவோம்**

**அதன் வழி நாமும் வாழ்வோம்**